**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. P. பாலமுருகன், B.Com., B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2023 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 01 ஆம் நாள் சனிக்கிழமை**

**I.A.No.02/2023 In O.S.No.263/2018**

1) பாப்பம்மாள்

2) ஆண்டி நாயக்கர்

3) முருகன்

4) கண்ணம்மா

5) மாதவபெருமாள் (எ) பெருமாள் ..... மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிர்//**

1) தேவர் பொம்மா நாயக்கர் (இறப்பு)

2) பெருமாள்

3) கோபாலகிருஷ்ணன்

4) கதிர்காமன்

5) சுப்பிரமணி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 26.06.2023 தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V.R.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துள்ள நிலையில், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மல்லன் அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## ஆணையுரை

மனுவில் கண்டபடி அசல் வழக்கில் திருத்தம் மேற்கொள்ள அனுமதிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்

1. மனுதாரர் வழக்கின் 3ம் வாதி. தாவா வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக

நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகளால் அசல் வழக்கில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருந்து போது 1ம் பிரதிவாதி கடந்த 20.09.2022 ம் தேதி இறந்துவிட்டார் என குறிப்புரை தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கில் 3 முதல் 5 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மகன்கள். 1ம் பிரதிவாதியின் இதர வாரிசுகளான மனுதாரர்கள் வழக்கில் தனிப்பட குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பொறுத்து எவ்விதத்திலும் இடைஞ்சல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதியின் மகன்களான 3 முதல் 5 பிரதிவாதிகள் வழக்கில் ஏற்கனவே தரப்பினர்களாக உள்ளனர். எனவே, 1ம் பிரதிவாதி இறந்ததை பொறுத்து பிராதில் திருத்தம் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கம்</u>**

2. எதிர்மனுதாரர் வழக்கின் 3ம் பிரதிவாதி. இறந்துபோன 1ம் பிரதிவாதி எதிர்மனுதாரரின் தந்தை. 1ம் பிரதிவாதி தேவர் பொம்மாநாயக்கர் கடந்த 20.09.2022 ம் தேதி இறந்துவிட்டார். மேற்படி இறப்பு செய்தியை எதிர்மனுதாரர் தனது தரப்பு வழக்கறிஞர் மூலம் சமூகம் நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார். இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு, கோபாலகிருஷ்ணன், கதிர்காமன், சுப்ரமணி, காமுத்தாய், கண்ணதாசன், மோகன்ராம் ஆகிய 6 நபர்கள் சட்டப்பூர்வ வாரிசுகள். இறந்துபோன 1ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் அனைவரையும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 4ன்படி (L.R. of deceased defendant) வழக்கில் சேர்க்கப்பட வேண்டும். எனவே, மனுதாரர்களின் மனுவை ரத்து செய்து முறைப்படி இறந்துபோன 1ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசுதாரர்களை உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 4ன்படி உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா அசல் வழக்கானது பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கு நிலுவையில் இருந்த போது 1ம் பிரதிவாதி கடந்த 20.09.2022ம் தேதி இறந்துவிட்டார். அதை பொறுத்து அசல் வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென்று மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டது. வழக்கு விசாரணையை காலம் கடத்து நோக்குடன் மனுதாரர்களால் மேற்படி மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரரின் இதர வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டது. 1ம் எதிர்மனுதாரரின் மகன்கள் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களாக உள்ளதாகவும், 1ம் எதிர்மனுதாரரின் இதர வாரிசுகள் வழக்கு சொத்துக்களை பொறுத்து எந்த இடைஞ்சலும் செய்யவில்லை என்றும் மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டது. தாவா வழக்கு நிலுவையில் இருந்த போது 1ம் பிரதிவாதி கடந்த 20.09.2022ம் தேதி இறந்துவிட்டதாகவும், அதை பொறுத்து அசல் வழக்குரையில் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென்றும் மனுதாரர்கள் தரப்பில் கூறியுள்ள காரணம் ஏற்றுக் கொள்ளும்படியாகவே உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இம்மனுவை அனுமதிப்பது குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடும் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எனவே நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2023ம் ஆண்டு ஜுலை திங்கள் 01ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**Sd/- P. பாலமுருகன்**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

| | | |
|---|---|---|
| **மனுதாரர்கள் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |

**Sd/- P. பாலமுருகன்**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**குளித்தலை.**